# பாலர் கல்வி

| தொகுதி 6 | 1941 ௵ டிசம்பர் ௴<br>விஷு ௵ மார்கழி ௴ | பகுதி 9 |
| --- | --- | --- |

## தாய்மொழி கற்பித்தல்

**M. Subaramaniam,** *L. M. C. High School, Shiyali.*

### V வாசித்தலும்—அதன் சில பொதுமுறைகளும்

**பேசும் நிலையிலிருந்து வாசிக்கும் நிலை**

விஷயங்களை மனத்தினுள் நினைப்பதற்கும், நினைத்தவற்றை வெளியிடுவதற்கும் சொற்களே ஆதாரமாக இருப்பதால் இவற்றைக் கொண்டுபேச குழந்தைகள் வெகு ஆச்சரியமாகக் கற்றுக்கொள்கிறார்கள். சிறு பிராயத்தில் குழந்தைகள் பிறர் நன்றாகப் பேசுவதை வெகு உற்சாகத்தோடும் கவனத்துடனும், அடிக்கடிக் கேட்கின்றார்கள். இப்படிக் கேட்டபின் அவர்களுடைய இளகலான மனத்தில் சொற்கள் அமைந்துவிடுகின்றன. இச்சொற்கள் எல்லாம் ஒரு விதமான பொருள் நிறைந்தவையாதலால், அவை பேசப்படும்போது நாளடைவில் பொருளோடு சேர்ந்து பழக்கமாகி விடுகின்றன. அறிமுகமான பொருள் அறிமுகமான சொல்லோடு சேர்ந்து வருகின்றது. எனவே பேசும் சக்தியில் அடங்கியிருப்பவை, கேட்கும் சக்தி, ஞாபக சக்தி, வாய்ப்பயிற்சி ஆகிய இவையாகும். இவற்றைக்கொண்டே குழந்தைகள் பேச்சுப் பழக்கத்தை விருத்தியாக்கிக் கொள்கின்றார்கள்.

பேசும்போது, சொற்கள் ஒலி வடிவமாக இருக்கின்றன. சிறுவர்கள் தம் காதுகளால் முதன் முதல் கேட்கும் சொற்களும் ஒலி வடிவமாகவே இருக்கின்றன. இந்தப் பேசும் நிலையிலிருந்து வாசிக்கும் நிலைக்குப் போகும்போது குழந்தைகள் இன்னும் சில கடினமான விஷயங்களைக் கவனிக்க வேண்டியதாக இருக்கிறது. முதலாவது வார்த்தைகள். இவ்

வார்த்தைகள் யாவும் பொருளோடு சம்பந்தப்பட்டவையாக இருக்கின்றன. இரண்டாவதாக வார்த்தைகளுக்கு ஆதாரமான எழுத்துக்கள் இருக்கின்றன. சில எழுத்துக்களின் சேர்க்கையால் சில வார்த்தைகளின் உச்சரிப்புச் சற்று மாறுதல் அடைகிறது. மூன்றுவதாக, வார்த்தைகளைப் பொருளோடு அமைத்துச் சரியான உச்சரிப்போடு வாசித்தல் உற்சாகம் ஏற்பட, பொருளும், சொல்லும், ஒலியும், ஒன்றுகச் சேர்ந்து மனத்தில் கருத்து அமைவது நான்காவதாகும். ஆகையால், எழுத்துக்களாலான சொற்களை அடிக்கடிச் சொல்லக் கேட்பதோடு அவற்றைப் பலதரம் கண்களால் பார்ப்பதும், கண்டபின் அச்சொற்களை மனத்தில் தங்க வைப்பதும், திரும்ப அவற்றை பழக்கமாகும் வரையில் அடிக்கடிப் பார்த்துச் சொல்வதும்; அதன் பின்பு கருத்தை மனத்தில் அமைப்பதும், ஆகிய பல முக்கியமான விஷயங்கள் வாசித்தலில் அடங்கியுள்ளன. வார்த்தைகளுக்குக் காரணமான எழுத்தாகிய குறிகளும், அவற்றின் தொனியும், இவ்விரண்டும் சேர்வதனால் உண்டாகும் பொருளும், (Symbol, Sound - Sense) வாசித்தலில் அடங்கி இருப்பதோடு, வார்த்தைகளைக் கோர்வையாகப் பார்ப்பதற்கு வேண்டி கண்களின் பழக்கமும் அடங்கி இருக்கின்றன. உரக்க வாசித்தலில், உச்சரிப்பும் தொனியும் ஏற்படுகின்றன. ஆனல் மௌனமாக வாசித்தலில் மனம் அதிகமாக நிலைத்து வேலை செய்கின்றது. ஆகவே, ஞாபகசக்தி, செவி, கண், வாய், முதலிய புலன் பயிற்சி வாசித்தலில் அடங்கி இருக்கின்றன.

### வாசித்தல் என்றுல் என்ன?

எழுத்துக்களைக் கற்றுக்கொண்டு அவற்றின் உதவியால் சொற்களை உச்சரித்துச் சொல்வது வாசிப்பாகாது. சொற்கள் எல்லாம் பொருளைக் குறிக்கவே இருக்கின்றன. வெறும் வாய்மாத்திரம் சொற்களைச் சொல்லிக்கொண்டு இருந்தால் பிரயோஜனமாகாது. வாசித்தலின் பிரதான நோக்கம் அர்த்தம் தெரிந்து கோள்வதேயாகும். கண்களால் எழுத்துக்களைக் கண்டு ஒன்றை வாசித்து அதன் பொருளைத் தெரிந்து கொள்ளாவிட்டால் அதைக் குருட்டுப்பாடம் என்கின்றோம். அர்த்தம் தெரிந்து கொள்ளாமல் வெறும் எழுத்தைக் கூட்டிப்படிப்பது வாசித்தல் என்றுல், ஒருவன் தன் வாழ்நாளில் அநேக பாஷைகளைப் படிக்கலாம். பொதுவாக வாசித்தல் என்பது மனேடு சம்பந்தப்பட்டதேயாகும். அதன் பயன் அறிவு. இதைச் சிறுவர்களுக்கு எவ்விதம் கற்றுக்கொடுத்தால் அவர்கள் எளிதில் சீக்கிரமாக வாசிக்கமுடியும்.

### தமிழின் சிறப்பு

ஆங்கிலத்தைப்போல் தமிழில் ஒரு எழுத்துக்குப் பல ஒலிகள் கிடையாது. இதனல் உச்சரிப்புக் கஷ்டமும் தமிழில் இல்லை. தமிழில் சிறப்பான ஒலிக்குத்தகுந்த தமிழ் எழுத்துக்கள் இருக்கின்றன என்பதை நாம், "தமிழ் ஒலிமுறை" அத்தியாயத்தில் பார்த்தோம். வல்லின

எழுத்துக்களில் சில வற்றில் சில விடத்தில் ஒலிமாற்றம் ஏற்படுகின்றன. அவ்வொலிமாற்றப் பிரகாரம் உச்சரிக்கா விட்டாலும் கூட வார்த்தைகளின் அர்த்தம் மாறுகிறது இல்லை. எனவே தமிழ் மொழியை வாசிக்கக் கற்பிக்கும் ஆசிரியர்கள், ஒலி முறையை அதிகமாக அனுஷ்டிக்க வேண்டியதில்லை.

### எழுத்து முறையும்—வாசித்தலும்

வாசித்தலை இம்முறைப்படி போதிப்பதற்கு ஆதாரமாக இருப்பது எழுத்துக்களே யாகும். தமிழ் மொழியில் இருக்கும் எழுத்துக்கள், உயிரெழுத்து மெய்யெழுத்து உயிர் மெய்யெழுத்து என இருநூற்றுப் பதினாறு. ஆய்த எழுத்து ஒன்று. இவைகளைக் கிரமமாகக் கற்றுக் கொண்ட பின்பே எழுத்துக்களைக் கூட்டி வாசிக்கவேண்டும். எழுத்துக்களை அடிப்படையாகக்கொண்டு தாய்மொழியைக் கற்பிக்கும் முறை நம் நாட்டில் தொன்றுதொட்டு வருவதை இன்றும் நாம் திண்ணைப் பள்ளிக்கூடங்களில் காணலாம். "எழுத்து அறிவித்தவன்" "எண்ணென்ப ஏனை எழுத்தென்ப" "எண்ணும் எழுத்தும்" "எண் எழுத்து இகழேல்," முதலிய மூதுரைகளிற் காணும் "எழுத்து" என்பதை வெறும் எழுத்து என்றே பாவித்து, வாசித்தலுக்கு முதற்காரணமான எழுத்தை ஸ்திரமாகச் சொல்லிக்கொடுத்தாலன்றி வாசிப்பு வராது என்னும் பிடிவாதக் கோட்பாடோடு இன்னும் சில ஆசிரியர்கள் இருந்து வருகின்றார்கள். இவர்கள் இம்முறையை ஆதரிப்பதோடு, இதைத் தழுவி எழுதப்பட்டிருக்கும் புஸ்தகங்களையும் ஆதரிக்கின்றார்கள். உதாரணமாக "அரிச்சுவடி" என்னும் புஸ்தகம் எழுத்து முறையையே தழுவி எழுதப்பட்டுள்ளது, உயிரெழுத்து, மெய்யெழுத்துக்களில் மொழிக்கு முதலிய எழுத்துக்களைக்கொண்டே, ஈரெழுத்து மொழி, மூவெழுத்து மொழி, நாலு ஐந்து, ஆறு முதலிய எழுத்துக்கள் அடங்கிய மொழிகள் ஆகிய இவை வரிசை முறையாக எழுதப்பட்டுள்ளன. ஒரு மாணுக்கன் அரிச்சுவடியை எழுத்துக்கூட்டி வாசித்து முடித்துவிட்டால் பின்பு வேறு புத்தகங்களைப் படிக்கலாம். செய்யுட்களையும் படிக்கலாம். கோவை உலா, அந்தாதி, பரணி, புராணச் செய்யுள், காவியச் செய்யுள், முதலியன வற்றைத் தாராளமாக மாணுக்கன் படிக்கலாம். அர்த்தம் விளங்கினாலும், விளங்காவிட்டாலும், இம்முறைப் பிரகாரம் அக்கரை இல்லை.

### இம்முறையின் அனுகூலங்கள்

'இது தொன்று தொட்டு வந்த முறை. இம்முறைப் பிரகாரம் சாதாரணமாக, ஆசிரியர்களுக்கு யாதொரு சிரமமும் இல்லை.' மிகவும் குறைவான திறமையுடைய சாதாரண ஆசிரியரும் தம் மாணுக்கர்களுக்கு நாளடைவில் தாய் மொழியைப் போதிக்கலாம். பிறநாட்டுச் சுலபமான போதனு முறைகளைப் படித்துத் தெரிந்து கொள்ள வேண்டிய அவசியம் ஆசிரியர்களுக்குத் தேவையில்லை. ஆசிரியர்களும் வேறு மொழி

பயிற்சியில் ஈடுபடவேண்டியதில்லை. எழுத்துக்களை பிள்ளைகள் உச்சரித்துக் கொண்டே எழுதும்போது ஒவ்வொரு எழுத்தின் சரியான ஒலியும், அதை உச்சரிக்கும் வாய்ப் பழக்கமும், அவர்கள் மனத்தில் நன்றாக அமையும். எழுத்தின் உருவமும் அழகாக இருக்கும். எழுத்துக்களைக் கூட்டி வாசிப்பதனாலே, எழுத்துப் பிழை உண்டாகாமலும் இருக்கும். இதனால் படிப்படியாகக் கஷ்டங்களும் குறைந்து கொண்டே வரும். பிள்ளைகளின் கவனசக்தியானது அடிக்கடி சொற்களில் அடங்கியுள்ள எழுத்துக்களிலேயே செல்கின்றபடியால், அவர்கள் வார்த்தைகளை நன்றாக உச்சரிப்பதோடு, எழுத்துக்களின் மாத்திரை, நன்றாகப் பேசும் பழக்கம், திருத்தமான உச்சரிப்பு, ஆகிய இவை தானாகவே விருத்தி அடைகின்றன. ஆகையால் இதுதான் பிள்ளைகளுக்கு மிகவும் பொருத்தமானது. என்று பண்டைக் காலத்து முறையில் வளர்ந்து பயிற்சி பெற்ற ஆசிரியர்களின் அபிப்பிராயம்.

## இம்முறையைப்பற்றிய ஓர் ஆக்ஷேபனை

எழுத்துக்களுக்காக குழந்தைகள் மனம் ஏற்படவில்லை. இவற்றை முறைப் பிரகாரம் கற்றுக் கொள்ளவும் அவர்களுடைய முழுக்காலமும் உண்டாகவில்லை. குறுகிய காலத்தில் சுலபமான எழுத்துக்களாலாகிய அறிமுகமான சொற்களையே கற்றுக் கொடுக்க வேண்டும் என்று பல மொழிநூல் வல்லோர் துணிவாகக் கூறுகின்றார்கள். மேலும் எழுத்துக்களைக் குழந்தைகள் எழுதும்போது உச்சரிக்கிற ஒலியும், அவற்றை சொற்களோடு சேர்த்து உச்சரிக்கும் ஒலியும் வித்தியாசப் படுகின்றன. உதாரணமாகப் பழைய முறைப் பிரகாரம் காகம் என்னும் சொல்லை கா—க—ம். என்று வாசிப்பதற்குப் பதிலாக 'காவென்ன, கஆன, ம்மேன்ன' என்று எழுத்துக் கூட்டி வாசிக்கும்போது எழுத்துக்களின் ஒலி மாறுதலோடு நேரமும் அதிகமாகிறது: குழப்பமும் ஏற்படுகின்றது. பாலர்கள் பேசும்போது எப்போதும் சொற்களையே உபயோகிக்கின்றார்கள். அவர்கள் எழுத்துக்களைச் சொல்கின்றதில்லை. பிறர் பேசும்போதும் வார்த்தைகளையே உபயோகிக்க இவர்கள் கேட்கின்றார்கள். பூனை என்னும் ஒரு பொருளைக் குறிக்க பூனை என்று சொல்வதற்குப் பதிலாக, ஒரு தலை, நான்கு கால், ஒரு வால், இரண்டு கண்கள், காதுகள், கூர்மையான பற்கள் என்று எவ்வளவுதான் சுட்டிக்காட்டிச் சொன்னாலும் சீக்கிரத்தில் பொருள் விளங்காது. மேலும் எழுத்துக்கள் சொற்களின் பாகம், சொற்களின் பொருளை விளக்க எழுத்துக்கள் குறிகளாக இருக்கின்றன. பிள்ளைகள் எப்போதும் முழுப் பொருட்களையே விரும்புகின்றனர். எழுத்துமுறை சொற்களின் முழுப் பொருளையும் பிள்ளைகள் அறிவதற்குத் தடையாக இருப்பதோடு எழுத்துக்களுக்குத் தனிப்பட்ட பொருளும் உண்டோ என்று அவர்கள் நினைக்கும்படி சந்தேகத்தை உண்டாக்குகின்றது. அன்றியும் எழுத்துமுறை மனோதத்துவ சாஸ்திர

முறைக்கு மாருக இருக்கிறது. ஏனென்ருல் பிள்ளைகள் எப்படி முழுப் பொருளையும் பார்க்கின்ருர்களோ அப்படியே அர்த்தம் தரும்படியான முழுச் சொற்களையே முதலில் கற்றுக்கொள்கின்ருர்கள். தவிர எழுத்துக்களை ஒலிப்பதைவிட சொற்களைச் சொல்வதில் அதிக அக்கரையையும், உற்சாகத்தையும் காட்டுகின்ருர்கள். சொற்கள் எப்போதும் பொருட்களையோ, எண்ணங்களையோ, உண்டாக்கி, மனத்தில் உருவங்களை அமைத்து விடுகின்றன. இச்சொற்களைச் சொல்லும்போது அவற்றிற்குத் தகுந்த பொருட்களை நினைப்பூட்டுகின்றன. வெறும் எழுத்தொலி தலைவலியாக இருக்கும். எனவே பலவழிகளிலும் எழுத்து முறையை அனுசரிப்பதைக் காட்டிலும் சொல்முறையே சிறந்ததாகும்.

**பார்த்துச் சொல்லும் முறையும்—வாசித்தலும்.**

இம்முறைப் பிரகாரம் பிள்ளைகள் முதன் முதல் சொல்லையோ வாக்கியத்தையோ ஆசிரியர் சொன்னதை கேட்கின்ருர்கள். பிறகு எழுதப்பட்ட சொற்களைத் தங்கள் கண்களால் கவனித்துப் பார்க்கின்ருர்கள். ஆசிரியர் சொன்னதைக் காதால் கேட்டு மனத்தில் அமைத்துச் சொற்களைப் பார்த்துப் பொருளோடு நினைப்புக் கூட்டிச் சொல்கின்ருர்கள். ஆசிரியர் சொற்களைக் குறித்துக் காட்டிச் சொன்னதை அப்படியே எழுதப்பட்ட சொற்களைக்கண்டு வாசிக்கின்ருர்கள்.. இதனுல் சொல்லின் உருவமும், அது உணர்த்தும் பொருளும், அதை உச்சரிப்பதனுல் உண்டாகும் ஒலியும் ஒன்ருகச் சேர்ந்து பிள்ளைகளின் கவனத்தைக் கவர்ச்சி செய்து மனத்தில் பதிய வைக்கின்றன. இம்முறைப்படி ஆரம்பத்திலிருந்து பிள்ளைகளுக்கு அறிமுகமான பொருட்களைக் குறிக்கும் சொற்களையும், பழக்கமான வார்த்தைகளையுமே உபயோகிக்க வேண்டும். எழுத்து சுலபத்தின் பொருட்டு அறிமுகமில்லாத சொல்லை எழுதி அதை வாசிக்கச் செய்வது கஷ்டமாகும். எனவே தெரிந்த பொருளைக் குறிக்கும் சொற்களைச் சுலபமான எழுத்துக்களால் எழுதி, அவற்றை பிள்ளைகள் பார்த்து படிக்கும்படி ஆசிரியர் படிப்படியாகப் பன்முறை அவற்றைப் படித்துக் காட்டவேண்டும். ஒரு சொல்லைக் காட்டி அதை சரியாக உச்சரித்து பிள்ளைகளும் அப்படியே செய்ய உற்சாக மூட்டவேண்டும். இம்முறை சொல்முறையையே அடிப்படையாகக் கொண்டுள்ளது.

**கதை முறையும் வாசித்தலும்.**

இம்முறை மிகவும் மேன்மையானது என்று பல நிபுணர்கள் அபிப்பிராயப் படுகின்ருர்கள். இதை வாக்கிய முறை (Sentence-Method) யின் விஸ்தரிப்பு என்றும் கூறலாம். எல்லா வாக்கியங்களும் கதையோடு சம்பந்தப்பட்டு இருக்கின்றன. ஆகையால் இது பிள்ளைகளுக்கு உற்சாகத்தை ஊட்டுகின்றது. கருத்துக்கு இடமாக இருப்பது வாக்கியமாகும். இக்கருத்து கதையோடு அமைந்திருந்தால் அது வெகு

எளிதில் பிள்ளைகள் மனத்தில் பதியும். வாசிக்க ஆரம்பித்துவிட்டால் சொற்களை வெகு சீக்கிரத்தில் அறிந்து கொள்வார்கள். இதனால் எழுத்தும் ஒலியும் தானாகவே பதிந்துவிடும். அதாவது, முதல் ஒலியும் பின்பு அவ்வொலியைக் குறிக்கும் எழுத்தும் அதன்பிறகு சொல்லும், இறுதியில் சொற்களால் ஆன ஒரு வாக்கியத்தையும் சொல்வதற்குப் பதிலாக, உற்சாகமுள்ள கதையை சிறு வாக்கியங்களாக பொருள் விளங்கும்படி போதித்தால், மற்றவை எல்லாம் தானாக எளிதில் தெரிந்துகொள்ள முடியும். கதை என்றால் பெரிய கதை என்று நினைத்துக்கொள்ளலாகாது. பிள்ளைகளின் அனுபவத்தை ஒட்டிய ஒரு பொருளைப் பற்றி முதல் கதைபோல் சுருக்கமாகப் பேசிவிட்டு பின்பு, அக்கதையின் முக்கியமான கருத்தடங்கிய விஷயத்தைச் சிறு வாக்கியங்களில் அமைத்து, ஆசிரியர் முதலில் வாசிக்கப் பிள்ளைகளும் அதைக்கேட்டு வாசிக்கவேண்டும். இவ்விதம் பலமுறைச் செய்தால் வார்த்தைகளைப் பிள்ளைகள் நன்றாக அறிவார்கள். வார்த்தைகள் ஒரேமாதிரி உச்சரிக்கப் படுவதைக் காட்டிலும் சற்று வித்தியாசமாக இருந்தால் நல்லது. ஏனென்றால் நாம் பேசும்போது வெவ்வேறு உருவமான சொற்களையும் வெவ்வேறு அளவுள்ள வார்த்தைகளையும் உபயோகிக்கின்றோம்.

### இக்கதைமுறையை எவ்வாறு ஆரம்பிப்பது

கதை முறைப்பிரகாரம் வாசித்தலைக் கற்பிப்பது பல வழிகளாக இருப்பினும் இங்கு ஒன்றை மாத்திரம் சுருக்கமாகக் குறிப்போம். பிள்ளைகள் எதில் அதிக உற்சாகப்படுகின்றார்களோ அதை முதலில் ஆசிரியர் தெரிந்துகொள்ளவேண்டும். இந்த உற்சாகத்துக்குக் காரணமாகப் பல பொருட்கள் இருக்கலாம். இப்பொருள், பள்ளிக்கூடம், அல்லது வகுப்பு, அல்லது, வீடு, அல்லது பிற இடங்களில் எங்கேயாகிலும் இருக்கலாம். இப்பொருளைப்பற்றி ஆசிரியர் முதன் முதல் பேசவிடவேண்டும். பல பிள்ளைகள் பல விஷயங்களைச் சொல்லக்கூடும். பின்பு ஒரு குறித்த பொருளைப்பற்றி ஒரு கதை எழுதப்போவதாக ஆசிரியர் பிள்ளைகளின் உற்சாகத்தைத் தூண்டவேண்டும். இதில் உடனே பிள்ளைகளில் சிலர் விருப்பங்கொள்ளலாம். பின்பு புத்தகத்தில் எழுதவேண்டிய முக்கியமான விஷயங்களைப்பற்றித் திரும்பவும் ஆசிரியர்கள் தங்கள் பிள்ளைகளைக் கேள்வி கேட்கின்றார். இப்படிக்கேட்டுவரும் விடைவாக்கியங்களைத் திரும்ப மாணுக்கர்கள் சொல்லும்படி செய்து அவற்றைத்தாமே அவர்கள் காணும்படியும் கேட்கும்படியும் சொல்லிக்கொண்டே எழுதுகிறார். ஒரு பெரிய தாளின் தலைப்புறம் படத்திற்கு என்று விட்டு இவ்வாக்கியங்களை பெரிய எழுத்தில் எழுதிவைக்கிறார். இப்படியே ஒவ்வொரு பிள்ளையும் சொல்லும் விடையை தினந்தோறும் அந்தத்தாளில் சேர்த்துக்கொண்டே போகின்றார். இந்த வாக்கியங்

களில் அடிக்கடி அநேகமாய் சில சொற்கள் பலதரம் வரும்படி எழுதப்படவேண்டும். பின்பு எல்லாவற்றையும் சேர்த்து ஆசிரியர் நிறுத்தித் தெளிவாகப்படிக்கின்றார், உடனே பிள்ளைகளைப் படிக்கச் செய்கின்றார். ஒரு பிள்ளை தவறினால் சற்று புத்திசாலியான பிள்ளையைக்கொண்டு வாசிக்கச்செய்வது விசேஷம். இப்படிப் பல தடவைகள் செய்த பின்பு, ஒரு வாக்கியத்தைப் படித்து அதைப் பிள்ளைகளைக் காட்டும்படி செய்கிறார். இம்மாதிரியே பல பிள்ளைகளையும் படிக்கச் செய்தால் கதையானது. உற்சாகம் அளிப்பதோடு, அது பலமாக மனத்தில் நின்று, வாசிக்கவும் சுலபமாகிறது.

### விளையாட்டு முறைப்பிரகாரம் வாசித்தலைக் கற்பிப்பது

இதை ஆங்கிலத்தில் (Play way) என்பார்கள். குழந்தைகளுடைய சுபாவம் அதிகமாக விளையாடுவது. இப்படி விளையாடுவதிலும் ஒவ்வொரு பிள்ளைக்கும் ஒரு தனிப்பட்ட விளையாட்டில் விருப்பம் உண்டு. இதர முறைகளைப்போல் இது ஒரு போதானாமுறை அன்று. தாய் பாஷை போதிக்கப்படும்போது பிள்ளைகளுடைய மனத்தில், சந்தோஷம், உற்சாகம், விருப்பம், சுலபம் என்று உணரும் மனப்பான்மை, செய்வதில் ஆர்வம் முதலிய விசேஷ குணங்கள் இருக்கும்படி செய்வதேயாகும். இத்தகைய மனப்பான்மை சிறுவர்களுக்கு ஏற்பட்டுவிட்டால் எந்தப் பாடமும் எளிதில் அவர்களுடைய மனத்தில் பதியும். ஞாபகத்திலும் அமையும். கடினமான பாடங்களும் சுலபமாகத் தோன்றும். இதைப் பற்றி விரிவாக இன்னொரு அத்தியாயத்தில் கவனிப்போம்.

### கலப்பான முறையே சிலாக்கியமானது

'எழுத்துமுறை', "கதைமுறை", 'பார்த்துப் படித்தல் முறை' முதலியவற்றில் எது மேன்மையானது என்றும் எது தாழ்வானது என்றும் திட்டமாகச் சொல்ல முடியாது. புத்திசாலியான ஆசிரியர்கள். எப்போதும் தக்க சந்தர்ப்பங்களுக்கும், பிள்ளைகளுடைய மனத்தன்மைக்கும் ஏற்றவாறு தங்களுடைய முறைகளை அமைத்துக்கொள்ளுகின்றார்கள். பொதுவாக குறுகிய காலத்தில், பிள்ளை உற்சாகத்தோடு, எதையும் கற்றுக்கொள்ளும்படி செய்வதே உத்தமம்.

### சில நோக்கங்கள்

பாடசாலைச் சிறு பிள்ளைகள் முதலாக உயர்தரக் கலாசாலை, கல்லூரி மாணவர்கள் இறுதியாக தாய்மொழியில் தாராளமாக வாசிக்கக் கற்பிக்கும் ஆசிரியர்களுடைய நோக்கங்கள் திட்டமாக இருக்கவேண்டும். இல்லாவிட்டால் தாய்மொழி வளர்ச்சி தடைப்படும் திருத்தமான உச்சரிப்பு, உரக்கப்படித்தல், அடிக்கடி படித்தல் சிறுவாக்கியங்களை கஷ்டமில்லாமல் உற்சாகத்தோடு வாசித்தல், பிழையின்றி தாராளமாக வாசித்தல், சொற்களைத் தகுந்தபடி சேர்த்தும் பிரித்தும், பொருள்படவும் நிறுத்த

வேண்டிய இடங்களில் நிறுத்தியும், அழுத்திச் சொல்லவேண்டிய இடங்களில் குரலைமாற்றி அழுத்திச்சொல்லி வாசித்தல் முதலிய லக்ஷணங்களை சிறு பிள்ளைகளுக்கும் உயர்தரப்பள்ளிக்கூட மாணவர்களுக்கும் போதிக்க வேண்டும். விசேஷ கருத்துக்களை அறிதல், விரைவில் ஒன்றை வாசித்து, அதன் பொருளைத் தெரிந்து கொள்ளல், சொற்களின் உபயோகம், அழகு, அமைப்பு ஆகிய இவற்றைக் கண்டுகொள்ளல், அர்த்தம் விளங்குமாறு பிறருக்கு ஒன்றை எடுத்துக்கூறுதல், பிறர் உதவி யின்றிதாமே, மாணுக்கர்கள் ஒரு புஸ்தகத்தைப் படிக்கவேண்டும் என்கிற அவாதோன்றல், முதலிய சிறப்பான நோக்கங்கள், பெரிய கல்லூரி மாணவர்களின், மனத்தில் அமைய வேண்டும்.

## வாசித்தலினல் உண்டாகும் சில நன்மைகள்

மாணவர்களுக்கும் தொழிலாளிகளுக்கும், பிறர்களுக்கும், வாசித்தல் இன்றியமையாதது. ஏனென்றால், வாசிப்பதனுல் அவர்கள் அனுகூலங்களைப் பெறலாம். இது மனத்தை ஒழுங்கான முறையில் திருத்தி அமைக்க ஒரு சிறந்த சாதனமாயிருக்கிறது. கேட்டல், பார்த்தல், உணர்தல், உரைத்தல் முதலிய சக்திகளை அதிகரிப்பதோடு, ஞாபக சக்தி, கற்பனைத்திறன், நிதானித்து யோசித்தல், ஒழுங்காகத் தீர்மானித்தல், கவன சக்தி, ஒரு கருத்தில் மனம் நிலைத்திருத்தல் முதலிய சிறப்புக்குணங்களும், அடிக்கடி இடை விடாமல் வாசிக்கின்றவனுக்கு அமைகின்றன. பேசும் திறமை, வாது புரியும் சக்தி, ஒன்றைக் குறித்து அழகாக எழுதுவதற்கு வேண்டியவிவரம் ஆகிய இவை விருத்தியாகின்றன. பொதுவாக நம் நாட்டில் தற்போது பல நூல் நிலையங்களும், வாசக சாலைகளும், அதிகரித்து வருகின்றன. பொது ஜனங்களுக்கு விசேஷ தினசரிச் செய்திகளைத்தாமே படித்தோ பிறர் சொல்லிக் கேட்டோ தெரிந்துகொள்ளவேண்டும் என்கிற எண்ணமும் அதிகமாக இருக்கின்றது. பற்பல பத்திரிகைகள் வெளியாகின்றன. தொழிலாளி இயக்கம், முதியோர் கல்விப்பெருக்கம், முதலிய விசேஷப் போக்கில் பல சமாசாரங்கள் ஒருவனுக்கு அவசியமாகத் தெரிய வேண்டும். ஆகையால் ஒருவன் வாசித்துக்கொண்டே இருக்கவேண்டும். திருவள்ளுவ நாயனரும்,

"தொட்டனைத் தூறு மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத் தூறு மறிவு." என்றுதினம் கற்கின்றவர்களைப்பற்றியும்,

"விலங்கொடு மக்கள் அனையர் இலங்கு நூல்
கற்றாரோடு அனையவர்" என்று, கல்லாதவர்களைக் குறித்தும் எழுதினர் போலும்.

(தொடரும்)

# கலையும் கைத்தொழிலும் VII

R. M. Savur, *Divisional Inspector of Schools.*

## கலையின் முக்கிய அம்சம்

இக்கட்டுரைகளில் கைத்தொழிலினால் செய்யப்படும் எல்லா சாமான்களைப்பற்றியும் கூற நான் வரவில்லை. இப்படிக் கூறுவது கலையையும் கைத்தொழிலையும் பற்றியப் பாட திட்டத்தின் நோக்கத்திற்குத் தகுதியல்ல. பள்ளிக்கூடங்களில் கலை, கைத்தொழில் இவைகளின் நோக்கம் பிள்ளைகளின் கற்பனா சக்தியை வெளிப்படுத்துவதற்குத் தகுந்த வசதி அளிப்பதேயாகும். ஆதலால் உபாத்தியாயர் பிள்ளைகளுக்கு அடிப்படையான முறைகளையும் கருவிகளை உபயோகிக்கும் திறமையையும்மாத்திரமே போதிக்கவேண்டும். செய்யவேண்டிய சாமான்கள், உருவ மாதிரிகள், அழகு படுத்தல் முதலிய விஷயங்களை பிள்ளைகளின் கற்பனா சக்திக்கே விடவேண்டும்.

J. W. காக்ஸ் என்னும் நிபுணர் இவ்விஷயங்களைப் பற்றி ஆராய்ச்சி செய்யுங்கால் கூறியிருப்பதை நாம் கவனிப்பது உபயோகமாயிருக்கும். அவர், தான் தயாரித்த யந்திர நுட்ப சக்திக்கேள்விகளின் **(Mechanical aptitude test)** பிரயோஜனத்தைச் சர்ச்சைசெய்வதற்கு பிள்ளைகளின் எத்தன சக்தியின் **(Initiative)** அளவைகள் வேண்டியிருந்தது. ஆதலால் அவர் கைத்தொழில் ஆசிரியர்களின் உதவியை நாடினர். ஆனால் அவர்களால் ஒருவித உதவியும் அளிக்க முடியவில்லை. ஏனெனில் பிள்ளைகளின் எத்தன சக்தியைக் காண்பிக்க பள்ளிக்கூடப் பாட திட்டத்தில் இடமில்லை. கைத்தொழில் ஆசிரியர்கள் பிள்ளைகள் வீட்டில் செய்த வேலைப்பாடுகளைக் கொண்டுதான் அவர்களின் எத்தன சக்தியை ஒருவாறு அறிய முடிந்தது. இன்னொரு விஷயம் காக்ஸ் கண்டு பிடித்தது என்னவென்றால் யந்திரநுட்ப சக்திக்கும் எத்தன சக்திக்கும் நெருங்கிய சம்பந்தம் உண்டென்பதுதான். தொழில் யோஜனை **(Vocational guidance)** க்கு இன்றியமையாத யந்திரநுட்ப சக்தி சூத்திரங்களைத் தயாரித்த இந்த நிபுணரிடமிருந்து நாம் தெரிந்துகொள்ள வேண்டியதென்ன? சாதாரணப் பள்ளிக்கூட பாட திட்டங்களில் பிள்ளைகளின் கற்பனா சக்திக்கு இடமில்லை என்பது ஒன்று. பிள்ளைகளுக்கு யந்திரநுட்ப சக்தி உண்டா இல்லையா என்று கண்டு பிடிப்பதற்கு, அவர்கள் தாங்களாகவே யோசனை செய்து உருவமாதிரிகள் அழகு படுத்தல் முதலிய விஷயங்களைத் தீர்மானிக்கிறார்களா என்பது இரண்டாவது. ஆதலால் தற்காலத்திலிருக்கும் கைத்தொழில் பாட திட்டத்தினால் என்ன பயன்?

சிறந்த போதனு முறைகளுக்கு வழிகாட்டியா யிருந்தாலொழிய நான் எழுதும் கட்டுரைகளை இப்பத்திரிகையை நடத்துவோர் என் உத்தியோக 'ஹோதா' வுக்காகப் பிரசுரிக்கமாட்டார்கள். ஆதலால் ஆசிரியர்கள் கவனிக்கவேண்டிய விஷயங்களை மாத்திரம் நான் சொல்லுகிறேன்.

கலையையும் கைத்தொழிலையும் பற்றி ஆசிரியர்கள் கவனிக்கவேண்டிய தென்ன? கலை என்பது சித்திரம், வர்ணம், கைவேலை, முதலிய எந்த வாயிலாக வெளிப்பட்டபோதிலும் இந்தவாயில்களுக்கெல்லாம் பொதுவான அடிப்படையான தத்துவம் ஒன்றே. ஆதலால் கலை என்பது தனித்து நிற்கும் பாடம் அல்ல. அது மற்றப் பாடங்களுடன் நெருங்கிய தொடர்பை உடையது. ஆனால் நம் பள்ளிக்கூடங்களிலோ சித்திர ஆசிரியரின் (Drawing master) சித்திரங்களுக்கும் கைத்தொழில் ஆசிரியரின் (Manual Training Instructor) வேலைக்கும் ஒருவித சம்பந்தமும் இல்லாமலிருக்கிறது. ஆனல் கலைக்கும் கைத்தொழிலுக்கும் நெருங்கிய சம்பந்தம் இருந்தால்தான் பிள்ளைகளின் கற்பனு சக்தியை வளர்க்கமுடியும். பாஷைகளில் பிள்ளைகளின் கற்பனு சக்தியைக் காண்பிக்க நாம் எவ்வாறு சந்தர்ப்பம் அளிக்கிறோமோ, அதேபோல் கலையிலும், கைத்தொழிலிலும் சந்தர்ப்பம் கொடுக்க வேண்டும்.

இக்கட்டுரைகளின் ஆரம்பத்தில் நான் நெசவு கற்பித்தலைப் பற்றிச் சில விஷயங்கள் கூறினேன். அவைகளை இங்கு ஞாபக மூட்டுகிறேன். நெசவு கற்பிக்கப்படும் பள்ளிக்கூடங்களில் தொழிலாளிகள் உபயோகிக்கும் பெரிய தறிகளே பிள்ளைகளுக்கும் கொடுக்கப்படுகின்றன. இத்தறிகளில் ஒரே தடவையில் அநேக ஜனங்கள் நெசவுசெய்யவேண்டியிருக்கிறது. பிள்ளைகள், துண்டு அல்லது போர்வைகள் போன்ற சாதாரணத்துணிகளையே நெசவு செய்கிறார்கள். இதில் கற்பனுசக்தியின் பல அம்சங்களுக்கு எங்கே இடமிருக்கிறது? ஒரு ரூல்தடி (Ruler) யை ஒரு பையன் செய்தாலும் அதைத்தான் செய்த பெருமையை அவன் உணர்கிறன். அநேகபிள்ளைகள் சேர்ந்து சிற்சில நேரங்களில் அங்குலம் அங்குலமாக நெசவுசெய்து முடித்த துணியில் எந்தப்பையன் தான் பெருமை கொள்ளமுடியும்? எனக்கு நெசவுத் தொழிலைப்பற்றி ஒன்றும் தெரியாதபோதிலும், கைத்தொழிலைக் கற்பிப்பதில் கவனிக்க வேண்டிய தத்துவத்தை விளக்கவே அதை உதாரணமாக எடுத்துக் கொண்டேன்.

சிறிது காலத்துக்குமுன் நான் படித்த புத்தகம் ஒன்றில் காணப்படும் விஷயம் ஒன்று இவ்விடம் கவனிக்கத் தக்கது. இது லண்டன் கௌண்டி கௌன்ஸிலில் (London County Council) கலைமேற்பார்வையாளராக இருக்கும் R. R. டாம்லின்ஸன் அவர்கள் எழுதிய முகவுரையிலுள்ளது.

"அடிப்படையான கைத்தொழில்களில் பெண்களில் சிறுவர்களுக்கோ, சற்று வயது வந்தவர்களுக்கோ தகுதியான பாடம் நெசவு வேலைதான். கற்பனு சக்தியை வளரச் செய்யக் கூடியதும் நெசவுதான். உடை நயம், வர்ணம் தீட்டுதல் ஆகிய வேலைகள் மனதை ஈடுபடும்படி செய்யக் கூடியவை."

மேலே கூறப்பட்டதில் வர்ணம் தீட்டுதலைப்பற்றி ஒன்று கூற விரும்புகிறேன். சிலர் எல்லா வர்ணங்களும் நல்லவைதான் என்று சொல்லலாம். ஆம். வர்ணங்களில் ஒன்றும் கெட்டது அல்ல. ஆனல் வர்ணச் சேர்க்கைகளில் குற்றமிருக்கலாமல்லவா? மில்களில் நூற்கப் பட்ட நூல்களில் கிடைக்கும் வர்ணங்கள் வர்ணச் சேர்க்கைக்குச் சௌகரியமானதாக இருப்பதில்லை. ஆதலால் பிள்ளைகளுக்கு நூல் நூற்பதையும், சாயம் போடுதலையும் கற்பிப்பது நலம். அப்பொழுது தான் அவர்கள் கைத்தொழிலின் உயர்வையும், கைகளால் நூற்று நெசவு செய்யப்பட்ட ஆடைகளின் நயத்தையும் அறிவார்கள்.

பள்ளிக்கூடத்தில் கைத்தொழில் கற்பிப்பதின் நோக்கம் இவ்வளவு சிறந்ததாக இருந்தபோதிலும் நாம் நடைமுதலில் காண்பதென்ன? நெசவு கற்பிக்கப்படும் பள்ளிக்கூடங்களில் நுழைந்து பார்த்தால் நான் சொல்லுவது உண்மை என விளங்கும். பாட திட்டம் போடுபவர்களின் நோக்கங்களுக்குச் சற்றும் சம்பந்தமில்லாமல் நடத்தும் ஆசிரியர்கள் நமது நாட்டிலிருப்பது டாம் லின்ஸன் துரைக்குத் தெரியாது. ஆதலால் தான் அவர் பள்ளிக்கூடங்களில் நெசவுத் தொழிலின் மேன்மையை அவ்வாறு புகழ்ந்திருக்கிருர். நம் நாட்டிலோ நெசவு வேலை பெண் பாடசாலைகளின் பக்கத்தில் கூடப் போவதில்லை. ஆண் பாடசாலைகளில் கூட நெசவு வேலை சிறுவர்களுக்குத் தகுதியானதல்ல என்ற தப்பான எண்ணம் இருந்து வருகிறது. ஆனல் இங்கிலாந்திலோ ஆரம்பப் பாடசாலைகளிலுள்ள சிறு குழந்தைகள் கூட நெசவு வேலை கற்றுக் கொள்ளுகிருர்கள்.

---

<u>கடிதப் பெட்டி</u>

## பஞ்சாயத்து பில்

பஞ்சாயத்து போர்டுகள் ஒழுங்காக நடைபெற வேண்டுமானல், இந்த போர்டுகளில் அங்கத்தினராக S. S. L. C. படித்த செகண்டரி கிரேட் உபாத்தியாயர்கள் தான் இருக்கவேண்டு மென்றும், அரசாங்கத்தாரின் புதிய பஞ்சாயத்து பில்லில் காணப்பட்டிருப்பது போல் கிராம உத்தியோகஸ்தர்களாகிய கிராம முனிசீப், கர்ணம் இவர்கள் இருப்பது நன்மையல்ல என்றும் ஒரு பஞ்சாயத்து ஆசிரியர் யூனியனின் காரியதரிசி எழுதுகிருர்.

# கல்வியும் இளஞ்சாரணியமும்

(198-ம் பக்கம் தொடர்ச்சி)

K. K. Lakshminarayanan, *Cubmaster, D.S.S.N. School, Walajabad.*

சிங்கக் குட்டிகளின் தேர்ச்சிப் பரீக்ஷைகள் :—

சிங்கக் குட்டியானவன், சிங்கக்குட்டி ஆசிரியரிடம் தனக்கு சிங்கக்குட்டியின் வாக்குறுதியும், சட்டமும், மூலமந்திரமும், தெரியும், என்பதை நிரூபித்துப்பின் கீழ்கண்ட வாக்குறுதிகளைச் செய்யவேண்டும்.

சிங்கக்குட்டியின் வாக்குறுதி :—

(1) என் நிறையின் விதிப்படி நடக்க என்னாலான வரையில் முயலுவேன்.

(2) ஒவ்வொரு நாளும் ஒரு நற்செயலைச் செய்யவும், நான் என்னாலான வரை முயலுவேன்.

சிங்கக்குட்டியின் விதி :—

(1) சிங்கக்குட்டி கீழ்படிந்து நடப்பான்.

(2) சிங்கக்குட்டி சுத்தமாக இருப்பான்.

சிங்கக்குட்டியின் மூல மந்திரம் :—

" முடிந்தவரை நற்காரியம் செய் "

சிங்கக்குட்டி முறையின் லக்ஷியம் :—

(1) தேகதிடம் : (2) மன உறுதி : (3) நீதி நேர்மை :

தேர்ச்சி நிலைகளைக் காட்டும் பிரிவுகள் : (Grades)

(1) இளம்பாதன் (Tenderpad)

(2) இரண்டாவது வகுப்பு (Second class cub)

(3) முதல் வகுப்பு (First class cub)

என்பவைதான் முக்கியமான பிரிவுகள் :

I இளம்பாதன் (Tenderpad) : ஒவ்வொரு சிங்கக்குட்டியும், ஆரம்பத்தில் இளம்பாதன் or கத்துக்குட்டி என அழைக்கப்படுவான். இந்த நிலையில் அவன் சிங்கக்குட்டிக்குரிய குறித்த உடுப்புகளை அதாவது நீல நிஜார், காகி ஷர்ட், ஒரு முக்கோண வடிவமுள்ள கைகுட்டை (Scarf) முதலியன அணிய அவனுக்கு உரிமை உண்டு. அவனுக்கு நாம் சிங்கக்குட்டியின் சின்னம் (Cub Badge) கொடுக்கலாம். அதை அவன் குல்லா இருந்தால் குல்லாவின் மத்தியிலாவது இல்லாவிடில்

ஷர்ட் ஜோபி (Left Side) யில் இடது பக்கமுள்ளதின் மத்தியில் அச்சின்னத்தை அணியவேண்டும். தவிர சிங்கக்குட்டிக்கு வேண்டிய பொதுவான அறிவு அதாவது சிங்கக்குட்டி என்பது என்ன, அதனுடைய நோக்கமென்ன, செய்யவேண்டிய காரியம் என்ன என்பதை அறியவேண்டும்.

**II.** இரண்டாம் வகுப்பு (**Second class cub**): ஒரு இளம்பாதனி (**Tenderpad**) லிருந்து இரண்டாம் வகுப்பு சிங்கக்குட்டியாக மாறுவதற்கு கீழேயுள்ளவைகள் அவனிடம் காணப்படவேண்டும்:—

(1) குறைந்தது இளம்பாதனுக இரண்டு மாத கால அனுபவம் இருக்கவேண்டும்.

(2) சிங்கக்குட்டிக்குத் தெரியவேண்டிய முடிகள் போடத் தெரியவேண்டும்.

(3) குட்டிக்கரணம், பச்சைக் குதிரை விளையாட்டு, தவளை தத்துதல், வலது கையாலும், இடது கையாலும், குறைந்தது பத்து கெஜ தூரத்துக்கு பந்து எரியவும், தெரிந்திருக்கவேண்டும்.

(4) கயிறு குதித்தல் (Skipping) 50 தடவை முன்பக்கமாகவும், பின்பக்கமாகவும், குதிக்கவும், தலையில் மூன்று பெரிய புத்தகங்களை வைத்துக்கொண்டு நேராக நிமிர்ந்து பத்து கெஜம் தூரம் நடக்கவாவது அல்லது தலையில் துணியை சுற்றி வைத்துக்கொண்டு தண்ணீர் உள்ள பானையை பிடிக்காமல் எடுத்துப்போகத் தெரியவேண்டும். (பானை சாதாரணமாக சிறியதாகத்தான் இருக்கவேண்டும்).

(5) கை கால்களையும், நகங்களையும், எப்படி வைத்துக்கொள்ளவேண்டும். ஏன் அப்படி வைத்துக்கொள்ளவேண்டு மென்பதையும், எப்படி சுவாசிப்பது, ஏன் அப்படி சுவாசிக்கவேண்டும் என்பதையும், நன்குக உணர்ந்து அதன்படி தினந்தோறும் அவன் அவைகளை பழக்கத்தில் கொண்டு வரவேண்டும்.

(6) அவன் தன் நிரைக்கு ஏதாவது இந்திய சரித்திரத்திலுள்ள நற்போதனைகளைக்காட்டும் ஒரு வீரனின் சரித்திரத்தையாவது, பக்தர்களின் சரித்திரத்தையாவது சொல்லத்தெரியவேண்டும்.

(7) மூன்று முக்கியமான இடங்களுக்குசிங்கக்குட்டி ஆசிரியரின் கீழ் உல்லாஸப் பிரயாணம் போயிருக்கவேண்டும்.

(8) கடிகாரத்தின் மூலம் சரியான மணியை வெகு சீக்கிரத்தில் பார்த்துச் சொல்லவேண்டும். மேல்கண்டவைகள் சரியாகக் காணப்பட்டால் நாம் அவனுக்கு சிபார்சு செய்து உள்ளூரிலுள்ள சாரண சங்கத்திலிருந்து இரண்டாவது வகுப்பு சிங்கக்குட்டியின் சின்னத்தை (**Second Class Cub Badge**) வரவழைத்துக் கொடுக்கலாம்.

III. முதல் வகுப்பு :—(**First class cub**) கீழேயுள்ளவைகள் முதல் வகுப்பு சிங்கக்குட்டியினிடம் காணப்படவேண்டும். பிறகு சின்னம் வழங்கலாம்.

(1) இரண்டாவது வகுப்பு சிங்கக்குட்டியாக நான்கு மாத காலம் அனுபவம் இருக்கவேண்டும்.

(2) திசைகாட்டும் குறியின் உபயோகமும், அதைப்பார்த்துத் தெரிந்து கொள்ளவும் தெரிந்து கொள்ளல்.

(3) தன்னுடையதாய் மொழியில் குறைந்தது ஐந்து பாட்டுகள் (தேசியப்பாட்டுகளாக) பாடவேண்டும்.

(4) கட்டை, உலோகம், ஓலை, அட்டை, களிமண், முதலியவை களிலிருந்து எட்டு மாதிரி உருவமாவது, அல்லது, புஷ்பங்கள், தேசியக் கொடி, படங்கள் வர்ணத்துடன் போடவேண்டும்.

(5) சைகிளில் போய் சொன்ன விஷயத்தை சீக்கிரம் சொல்லித் திரும்பவேண்டும் அல்லது தெரு சுத்தம் முதலிய பரோபகாரத்தொழில் புரிய வேண்டும்.

(6) தன்னுடைய பட்டணம் அல்லது கிராமத்தின் சரித்திரத் தையும், கிராமத்திலிருந்து போகும் முக்கியமான ரோட்டுகளையும், பக்கத்திலுள்ள ஊர்களையும் தெரிந்து கொண்டிருக்கவேண்டும்.

(7) மேஜை உயரத்திலுள்ள 12 அடி நீளம் 6 அங்குலம் அகல முள்ள கட்டையில் நடக்கத்தெரியவேண்டும்.

(8) வெட்டுப்பட்ட விரலுக்காவது தீயில் அகப்பட்ட விரலுக் காவது உடனே செய்யவேண்டிய முதலுதவியை தெரிந்து கொண்டிருக்க வேண்டும். மேல் கண்டவைகள் அவனிடத்தில் இருந்தால் நாம் அவனுக்காக சிபார்சுசெய்து உள்ளூர் சாரண சங்கத்தினிடமிருந்தாவது இல்லாவிட்டால் ஜில்லா சாரண சங்கத்தினிடமிருந்து வரவழைத்தாவது (**First Class Cub Badge**) முதல் வகுப்பு சிங்கக்குட்டியின் சின்னம் வழங்கலாம்.

குறிப்பு :—நான் எங்கள் பள்ளியில் சிறுர்கள் ஏழ்மையால் கஷ்டப்பட்டதால் சிங்கக்குட்டியின் உடுப்பை கமிஷனர் உத்திரவுபெற்று சற்று மாற்றி இருக்கிறேன். அது பார்ப்பதற்கு அழகாகவும், பெற் றோர்களுக்கும் சிக்கனத்தில் முடிகிறது. அதாவது (1) நீல அரை நிஜார். (2) கதர் வெள்ளை நிறத்தில் அரை கை பனியன் (**Body**) (3) பச்சை துணி ஓரம் மஞ்சள் கலர் கொடுத்து (**Scarf**) முக்கோண வடிவமுள்ள கைகுட்டையும் கொடுத்து இருக்கிறேன்.

(தொடரும்)

# 1-5. வகுப்புகளில் கற்பிக்கக்கூடிய தேகாப்பியாச விளையாட்டுக்களைப் பற்றிய விளக்கம்.

By Sri, T. S. Muthuswami, *Physical Director, E. R. High School.*

அறிவு வளர்ச்சியைப் போலவே உடல் வளர்ச்சியும் பிள்ளைகளுக்கு இன்றியமையாதது. ஆகையால் உடல் வளர்ச்சிக்குச் சாதனமாகிய விளையாட்டுகள் பிள்ளைகளுக் குரிய பாடங்களுள் முக்கிய ஸ்தானத்தைப் பெறும். இவ்விளையாட்டுகள் உடலுக்கு வன்மையையும் வளர்ச்சியையும் மட்டுமல்லாமல், மன உற்சாகத்தையும் அளித்து, மற்றப் பாடங்களால் ஏற்பட்ட அயர்வையும் நீக்கும். ஆகவே, ஆரம்பாசிரியர்கள் மற்றப் பாடங்களைப் போலவே இப்பாடத்திலும் தேர்ச்சி பெற்று, தாமும் பிள்ளைகளோடு சேர்ந்து, விளையாட்டுகளை முறையாக நடத்தவேண்டு மென்பது வற்புறுத்தப் படுகிறது.

## தயார் செய். (Warm up)

சாதாரணமாக தேக அப்பியாசங்களையோ அல்லது விளையாட்டுக்களையோ தொடங்குவதற்கு முன்னால் சிறிது நேரம் பிள்ளைகள் ஓடியாடி உடம்பைப் பதப்படுத்திக் கொள்ளவேண்டும். இவ்விஷயத்தில் (Follow the leader) தலைவனைப் பின்பற்று என்ற முறையை பிள்ளைகள் அநுசரிக்க வேண்டும். அதாவது தலைவன் என்ன செய்கிருனே அதே மாதிரி மற்றவர்களும் பின்பற்றிச் செய்ய வேண்டும்.

பயிற்சிகள் :—ஓடுதல், நொண்டியடித்தல், குட்டிக்கரணம் போடுதல், கையைத் தூக்கி ஓடுதல், தாவுதல், குதித்தல், தவழ்தல் முதலியன. ஆனால் இப்பயிற்சிகளை ஒரே இடத்தில் இருந்து கொண்டே செய்யாமல், அணி அணியாக இடம் விட்டு இடம் மாறிச் சென்று செய்ய வேண்டும்.

## இசையோடு கூடிய பயிற்சிகள் (Rhythm)

கும்மி, கோலாட்டம், Right, Left என்று சொல்லிக் கொண்டே அடிகள் போடுதல், நாட்டிய அடிகள், முதலியன இத்தலைப்பில் சேரும். இவற்ருேடு (Mimicries) பக்ஷிகள், மிருகங்களைப் போல் சப்தித்தலையும் கற்பிக்கலாம். ஆங்காங்கு பொருத்தமாயுள்ள அபிநயங்களையும் ஒட்டங்களையும் கலந்து கொள்ளவேண்டும்.

## வகுப்பு அமைக்கும் முறை

**Fall in** :—பிள்ளைகள் வரிசையாக நிற்கவேண்டும். நிற்கும் பொழுது இடதுகாலைப்பக்கத்தில் போட்டுப் பின்னால் கைகளைக்கட்டி

நிற்கவேண்டும். குட்டையான பையன் வலதுகோடியில் இருக்க வேண்டும்.

**Stand at ease** :—பின்னால் கைகளைக் கட்டி, கால்களை 10, 15 அங்குலதூரத்தில் வைத்துக்கொள்ளவேண்டும். ஆனால் நிற்கும்பொழுது நிமிர்ந்து, வயிற்றை உள் இழுத்து, மார்பை உயர்த்தி நிற்கவேண்டும். தலையை எந்தப்புறமும் சாய்க்காமல் நேராக வைத்து நிற்கவேண்டும்.

**Stand easy** :—வரிசையில் நிற்கவேண்டும். கொஞ்சம் தசைகளைத் தளர்த்தி இஷ்டம்போல் நிற்கலாம்.

**Attention**.—காலைச் சேர்த்து, கால்களை நேரே தொங்கவிட்டு நிமிர்ந்து நிற்கவேண்டும்.

**Right Dress** :—நிமிர்ந்து நின்று, வலதுபுறம் தலையைத் திருப்பி, அடுத்தவன் மார்புக்கு நேராக மார்பை வைத்துக்கொள்ள வேண்டும். இவ்வுத்தரவைக் கொடுத்து, அவர்கள் சரிப்படுத்திக்கொள்ளும் வரையில் அவகாசம் கொடுக்கவேண்டும்.

**Eyes Front** :—தலையை நேரே திருப்பு.

**Right turn** :—வலது புறம் திரும்பு. '1' என்று சொன்னவுடன் வலதுகுதிகாலிலும், இடது முன்காலிலும் திரும்பவேண்டும். '2' என்று சொன்னவுடன் இடதுகாலைச் சேர்க்கவேண்டும்.

**Left turn** :—இடதுபுறம் திரும்பு. '1' என்று சொன்னதும் இடது குதிகாலிலும், வலது முன்காலிலும் திரும்பவேண்டும். '2' என்று சொன்னவுடன் வலதுகாலைச் சேர்க்கவேண்டும்.

**About turn** :—பின்புறம் திரும்பு '1' என்று சொன்னவுடன் வலது குதியிலும் இடது முன்காலிலுமாகப் பின்புறம்திரும்பி, '2' என்றவுடன் இடதுகாலைச் சேர்க்கவேண்டும்.

**From the right in fours—Number** :—வலது புறத்திலிருந்து நான்காக எண். இவ்வுத்தரவில் எவ்வளவு சிறு அணிகளாக வகுக்க வேண்டுமோ, அவ்வெண்களாக எண்ணவேண்டும். தவறுதலாக எண்ணினால் நிறுத்தி, மறுபடியும் முதலிலிருந்து எண்ணச் சொல்ல வேண்டும்.

**Open order—Forward March** :—அணிவகுத்தல். சாதாரணமாக நவ்வாலாக எண்ணச்சொல்லி, 'முன்னேவா' என்று கட்டளையிட்டதும் '1' எல்லோரும் இருந்த இருந்த விடத்திலேயே நிற்க, '2' எல்லாம் 2 தப்படிகளும், '3' எல்லாம் 4 தப்படிகளும், '4' எல்லாம் 6 தப்படிகளும் முன்னே வரவேண்டும். ஆரம்பிக்கும் பொழுது 2, 3, 4 எண் உள்ளவர்கள் சேர்ந்தாற்போல் வரவேண்டும். 2 தப்படிகள் வந்ததும் '2'-கள் நின்றுவிட வேண்டும். 4 தப்படிகள் வந்ததும் 3-கள் நின்றுவிட வேண்டும், 6 தப்படிகள் வந்ததும் 4-கள் நின்றுவிட வேண்டும்,

சரியாக வரத்தவறினால் 'பின்புறம் திரும்பு' என்று உத்தரவு கொடுத்து மறுபடியும் செய்யச் சொல்லவேண்டும்.

**Close order Forward March**:—இவ்வுத்தரவில் பிரிந்த வரிசைகள் ஒன்று சேரவேண்டும். முக்கியமாக முன்வரிசை வரும் வரையில் காத்திருந்து சேர்ந்து பின்வரிசை செல்லவேண்டும்.

குறிப்பு:—மேற்கண்ட உத்தரவு கொடுப்பதற்கு முன் **About-turn** உத்தரவு கொடுக்க வேண்டும்.

**Half left turn**:—அரை இடப் புறமாகத் திரும்பச் சொல்ல வேண்டும். இவ்வுத்தரவின்படி நின்றால், உபாத்தியாயர் செய்து காட்டுவதை வகுப்பு முழுவதும் கவனிக்க முடியும்.

**Marching**:-(1) **Mark time mark**-தலைவன் சொல்லுவதற்குத் தகுந்தபடி 'இடது' என்று சொல்லும் பொழுது இடது காலையும், 'வலது' என்று சொல்லும் பொழுது வலது காலையும் பூமியில் தட்ட வேண்டும்.

(2) **Forward March**:—முன்னே போ.

(3) **Double time mark**:—சீக்கிரமாகச் சொல்லிக் கொண்டே காலைத் தட்டு.

(4) **Column right march**:—வரிசையாக நிற்கவேண்டும். முதற் பையன் எந்த பக்கமாகத் திரும்பினானோ அதே பக்கமாக மற்றவர்களும் திரும்பவேண்டும். நேர்கோணம் மாறாமல் திரும்பவேண்டும். வலது பக்கம் போக வேண்டும்.

(5) **Column right about march**:—வரிசை முழுவதும் வலது புறமாக எதிர்ப்பக்கம் திரும்பவேண்டும்.

(6) **Class halt**:—இவ்வுத்தரவிட்டதும், போய்க்கொண்டிருக்கும் அணி நிற்கவேண்டும். **Quick march**-ல் போய்க் கொண்டிருக்கும் அணி 1, 2. என்ணில் நிற்கவேண்டும். **Double time**-ல் போய்க் கொண்டிருந்தால் 1, 2, 3, 4 என்று நிற்கவேண்டும்.

(7) **On the right form fours march**:—வரிசையாக நிற்கச் சொல்லவேண்டும். நவ்வாலாக எண்ணச் சொல்லவேண்டும். பிறகு வலதுபுறம் திரும்பச்சொல்லி **On the right form fours march** என்று சொன்னால், முதல் எண் நிற்கவேண்டும். மற்ற எண்கள் முறையே முந்திய எண்ணிற்கு வலது பக்கமாக நிற்கவேண்டும்.

(8) **Right by file**:—வலது கோடிப்பையனை முன்னாகவைத்து இவர்கள் வரிசையில் வந்து நிற்கவேண்டும். அதேமாதிரி **left by file.**

(9) **Guide by the short end**:—போய்க்கொண்டிருக்கும் பொழுது குட்டையான பையனுடைய தப்படிக்கும், உயரமான பையனுடைய தப்படிக்கும் வித்தியாசம் இருக்கக்கூடுமாதலால், குட்டையான பையனை உயரமானபையன் அநுசரித்து நடக்கவேண்டும். இவர்கள் குட்டையாகவுள்ள பிள்ளைகளைப்பார்த்து நேராக நடந்துவர வேண்டும்.

(10) **Fours right**:—நான்காக வுள்ளவர்கள் வலதுபுறம் திரும்பவும், நான்குபேரும் சேர்ந்தாற்போல் திரும்பவேண்டும். கடை-

சிப் பையன் வரும் வரையில் முனையாள் நின்று பிறகுசேர்ந்து போக வேண்டும்.

(11) **Fours column right** :—நவ்வாலாக உள்ளவர்களின் அணி வலதுபக்கம் திரும்பவேண்டும். முதல் நான்குபேர்கள் எந்த இடத்தில் போய்த்திரும்பினுர்களோ, அதே இடத்தில் மற்றவர்களும் போய்த் திரும்பவேண்டும்.

## Drill

(1) கைகளை நேரே நீட்டுவது. ஒன்று.
தொங்கப் போடுவது. இரண்டு.

(2) கைகளைப் பக்கத்தில் நீட்டுவது. ஒன்று.
தொங்கப் போடுவது. இரண்டு.

(3) கைகளைப் பின்னே நீட்டுவது. ஒன்று.
தொங்கப் போடுவது. இரண்டு.

(4) கைகளை முன்புறமாக உயர்த்துவது. ஒன்று.
கைகளைப் பக்கமாகத் தொங்கவிடுவது. இரண்டு.

(5) கைகளைப் பக்கமாக உயர்த்துவது. ஒன்று.
கைகளைப் பக்கமாகத் தொங்கவிடுவது இரண்டு.

(6) கைகளை முன்புறமாக உயர்த்துவது. ஒன்று
கைகளைப் பக்கமாகத் தொங்கவிடுவது. இரண்டு

(7) கைகளை முன்புறமாக உயர்த்திக்
குதிங்காலில் நிற்பது. ஒன்று.
திரும்பி ஸ்தானத்திற்கு வருவது. இரண்டு.

(8) கைகளை மேற்புறமாக மடக்கி
உட்காருவது. ஒன்று.
எழுந்திருப்பது. இரண்டு.

(9) கைகளைப் பக்கமாக உயர்த்திக் கால்களை
அகட்டி நிற்பது. ஒன்று.
திரும்பி வருவது இரண்டு.

(10) இடுப்பில் கைவை (a) உடலை இடதுபுறமாக (1) வளை. (2) நிமிர்

(b) உடலை வலது புறம் வளை. (1) நிமிர். (2)

(c) உடலை முன்புறம் வளை. (1) நிமிர். (2)

(d) உடலைப் பின்புறம் வளை. (1) நிமிர். (2)

மேற்கூறிய அப்பியாசங்களைப் பிள்ளைகள் நன்றுகப் பயின்ற பிறகு **Rhythm** வருவதற்குச் சில அப்பியாசங்களைச் சேர்ந்தாற் போலும் நடத்தலாம்.

(தொடரும்)

# செய்தித் திரட்டு

## ராமகிருஷ்ண ராஜாபேட்டை ஆசிரிய சங்கம்.

15—11—41. ல் இச்சங்கம் புத்தூர் டிப்டி இன்ஸ்பெக்டர் அவர்கள் தலைமையில் கூடியது.

ஸ்ரீ முனிரத்னம் என்பவர் இரண்டாவது வகுப்பிற்கு ஸ்தானம் மதிப்பு (100 வரை) என்ற மாதிரிப்பாடம் நடத்திக் காண்பித்தார். பிறகு பெற்றோர் சங்கத்தால் ஏற்படும் நன்மைகள் என்பது பற்றி வியாசம் வாசிக்கப்பட்டது.

## ஓமலூர் தாலுகா போர்டு எலிமெண்டரி பாடசாலை ஆசிரியர்களின் யூனியன்

16—11—41. ல் காரியக்கமிட்டி ஜலகண்டபுரத்தில் கூடியது. சேலம் ஜில்லா போர்டு பிரசிடெண்டு அவர்களிடம் நேரில் ஆஜராகி ஆரம்ப ஆசிரியர்களின் குறைகளை எடுத்துச்சொல்ல ஒரு தூது கோஷ்டி அனுப்பவும், முதியோர் கல்வியைப் பரப்ப தாலூகா ஆசிரியர்கள் அனைவரையும் இயன்றவரை சேவை செய்யும்படி வேண்டிக்கொள்ளவும், 50-வயது அல்லது 20-வருஷ சர்வீஸ் ஆன லோயர் கிரேட் ஆசிரியர்களை நீக்கி விடலாம் என்ற உத்திரவை ரத்து செய்யும்படி அரசாங்கத்தாரை வேண்டிக்கொள்ளவும், எட்டாவது பரீட்சைக்கு மாதிரி வினாக்கள் அனுப்பும்படி பரீட்சை கமிஷனரை வேண்டிக்கொள்ளவும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

## வாலாஜாபாத் இந்து மத பாடசாலை மாஜி அமைச்சர் விஜயம்

23—11—41 அன்று மாஜி அமைச்சர் திருவாளர் V. I. முனுசாமிப்பிள்ளை அவர்கள் ஷை பாடசாலையையும் அதைச்சார்ந்த மாணவர் இல்லத்தையும், திருவள்ளுவர்தொழிற்சாலையையும்பார்வையிட்டார்கள். பின்பு மாணவர் கூட்டத்திற்குத் தலைமை யேற்று அவர் பேசினது சுருக்கமாக:—

"இந்துமத பாடசாலையிலுள்ள மாணவர்கள் தோற்றமே எனக்கு மகிழ்ச்சி தருகின்றது. அவர்கள் பேச்சையும் செயலையும் பார்க்கும் போது இப்பாடசாலை மிகவும் உயர்ந்த நன் முறைகளில் நடத்தப்பட்டு வருகின்றது என்பது வெளிப்படுகின்றது. இக்குருகுலத்தில் மாணவர்களுடைய உடம்பு, அறிவு, ஒழுக்கம், எல்லாம் வளர்க்கப் பெறுகின்றன. இப்பள்ளியின் விரதாச்சாரி இயக்கத்தினர் செய்து காட்டியவை மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் உள்ள ஊக்கத்தைக் காட்டுகின்றன. அவ்வியக்கத்தைப் பாராட்டுகிறேன். தொழிற்சாலை பாடசாலைச்

சிறுவர்களுக்குத் தனிப்பட்ட பயிற்சி அளிக்கின்றது. இப்பாடசாலை நாட்டுக்குப் பெரிதும் நன்மை செய்கின்றது. இப்பாடசாலையும் மாணவர் இல்லமும் நீடு வளர்ந்தோங்குக."

---

## அரு. நடேசன் செட்டியார் உயர்தர ஆரம்ப பாடசாலை, சிவகங்கை

4—11—41 ல். மேற்படி பாடசாலை பெற்றோர் சங்கம் சங்கத் தலைவர் ஸ்ரீ R. நாராயணஞ் செட்டியார் தலைமையில் நடந்தது. பள்ளிக்கூட பிரசாரக்கமிட்டித் தலைவர் ஸ்ரீ D. ஸ்டான்லி ஆசீர்வாதம், பெற்றோர்களை வரவேற்று இச்சங்கத்தின் நோக்கம் என்ன என்பது பற்றி பேசினார். தலைமை ஆசிரியர் ஸ்ரீ S. பழனிவேலு அவர்கள் 'பெற்றோர்களின் கடமை' என்பது பற்றியும், பிறகு தலைவர் 'பெற்றோர்களாகிய நமது கடமை' என்றும் ஒட்டிப்பேசினார்.

---

## அரு. நடேசன் செட்டியார் பாடசாலை, சிவகங்கை மாணவர் சுற்றுப் பிரயாணம்

26 மாணவர்களும் 4 ஆசிரியர்களும் சேர்ந்து 30—11—41 தேதி புரப்பட்டு மண்டபம் முகாம், தனுஷ்கோடி, சேதுக்கரை, ராமேஸ்வரம், கந்தமாபருவதம், பாம்பன் பாலம். முதலிய இடங்களிலுள்ள அதிசயங்களைக் காட்சிகண்டு 2—12—41 தேதி சிவகங்கை திரும்பி வந்தனர். இவர்கள் சென்ற இடங்களில் உபசரித்தவர்களுக்கு நன்றி செலுத்துகிறார்கள்.

---

## பனமலைப்பேட்டை திரவிய சகாயப் பாடசாலை, புதுக்கட்டிடத் திறப்பு விழா

9—11—41. ல் அனந்தபுரம் டாக்டர் ஸ்ரீ S. நரசிம்மைய்யர் திறந்து வைத்தார். மாணவ மாணவிகளின் ஊர்வலம். தலைமை ஆசிரியர் ஸ்ரீ R. நாகராஜய்யர் 'பாடசாலையும் பெற்றோர் ஒத்துழைப்பும்' என்பது பற்றியும், தலைவர் ஸ்ரீ S. நரசிம்மய்யர் 'பாடசாலையும் சுகாதாரமும்' என்பது பற்றியும், ஸ்ரீ சீனிவாசப் பிள்ளையும், ஸ்ரீ பச்சையப்ப முதலியாரும் 'கல்வி' என்பது பற்றியும், ஸ்ரீ M. நடேசய்யர் 'கம்பரும் கல்வியும்' என்பது பற்றியும் சொற்பொழிவு செய்தார்கள்.

---

## திருச்செங்கோடு தாலூகா போர்டு ஆரம்ப ஆசிரியர் யூனியன், சங்ககிரி

23—11—'41 மாலை ஷை யூனியன் நிர்வாகக் கமிட்டி யூனியன் தலைவர் ஸ்ரீ S. செல்லப்ப கவுண்டர் அவர்கள் தலைமையில் கூடிற்று. தீர்மானங்கள்.

(1) தர்மபுரி கில்டு மகாநாட்டு 4-வது தீர்மானத்திற் கிணங்க இத்தாலூகாவிலுள்ள ஆசிரியர்களனைவரும் 'முதியோர் கல்வி' விஷயத்தில் சிரத்தை எடுத்துக்கொண்டு கல்வி யின்மையைப் போக்கவேண்டும்.

(2) லோயர்கிரேடு ஆசிரியர்கள் விஷயமாய் விடுத்த 20 வருஷம் சர்வீஸ் அல்லது 50 வயதுவரை என்ற சர்க்கார் அறிக்கையை நீக்கி லோயர் கிரேடு ஆசிரியர்களை 55 வயதுவரை சர்வீஸில் வைத்துக் கொள்ளுமாறு கவர்ன்மெண்டாரைக் கேட்டுக்கொள்ளுகிறது.

இன்னும் பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

---

## மோடமங்கலம் ஆண்பாடசாலை மாணவர்கள் உல்லாசப் பிரயாணம்

23—11—41-ல் மூன்று ஆசிரியர்களுடன் 4, 5 வகுப்பு மாணவர்கள் 5-மைலுக்கப்பாலுள்ள சங்ககிரி துர்க்கம் என்று மிடத்திற்கு உல்லாசப் பிரயாணம் சென்றனர். அங்கே மலைமேலுள்ள திப்பு சுல்தானின் பழைய கோட்டையின் பல பாகங்களைச் சுற்றிப்பார்த்து விட்டுவந்தனர்.

தண்ணீர்பந்தல்பாளையம் பெண்பாடசாலை தலைமை ஆசிரியையும், இரண்டு மாணவிகளும் காட்சிகாண வந்திருந்தனர்.

---

## செளராஷ்டிர உயர்தர ஆரம்ப பாடசாலை, பெற்றோர் சங்கம், நிலக்கோட்டை

25—11—41-ல் ஸீனியர் டிப்டி இன்ஸ்பெக்டர் ஸ்ரீ K. ராமலிங்க அய்யர் அவர்கள் தலைமையில் மேற்படி சங்கம் கூடிற்று. அநேகம் பெற்றோர்களும் பிரமுகர்களும் வந்திருந்தனர். மாணவ மாணவிகள் பல விளையாட்டுகளால் வந்திருந்தவர்களை உற்சாகப்படுத்தினர். தலைவர் 'பெற்றோர் ஆசிரிய ஐக்கிய பாவம்' என்பது பற்றி தெளிவாக உபந்நியசித்தார். மாணவ மாணவிகளால் 'புத்தர்' நாடகத்தில் சிலகாட்சிகள் நடித்துக் காட்டப்பட்டன.

---

## கல்வி சுகாதாரக் கொண்டாட்டம், கண்டாச்சிபுரம்

கண்டாச்சிபுரம் போர்டு ஆண், பெண் பாடசாலைகளின் பெற்றோர் சங்கச் சார்பில் ஷை கொண்டாட்டம் 23—11—41 முதல் 28—11—41 முடிய சிறப்பாக நடந்தது.

23—11—41 ஆரம்ப விழா :—தலைவர் ஸ்ரீ C. N. லக்ஷ்மீகாந்தம் B. A., L. T.,

சொற்பொழிவு :—பூகோள பாடபோதனை; காரைக்கால் அம்மையார் சரித்திரம்—தமிழ் பண்டிதர் ஸ்ரீ கிருஷ்ணமாச்சாரியார்.

24—11—41 சுகாதார தினம்—காலை ஊர்வலம். தலைவர்—ஜில்லா போர்டு மெம்பர் ஸ்ரீ G. ரத்தின சபாபதி முதலியார்.

சொற்பொழிவு:—'சமூகமும் சுகாதாரமும்'—நாட்டாண்மைக்காரர் ஸ்ரீ S. குப்புசாமி முதலியார்; சுகாதார நாடகம்—ஆண்பாடசாலை மாணவர்கள்.

25—11—41 ஸ்திரீகள் தினம்—தலைவி—ஸ்ரீ அலமேலு அம்மாள் சொற்பொழிவு:—பெண்பாடசாலை ஆசிரியைகள்.

26—11—41 மாணவர் தினம்—தலைவர்—ஸ்ரீ. ராம சடகோபன் சொற்பொழிவு:—ராமாயணத்தில் அங்குலீயப் பிரதானம். நாடகம்—'புலவர் கர்வபங்கம்'—மாணவிகள்.

28—11—41 முடிவுதினம்—தலைவர் :—ஜனாப் குத்புடீன் சாகிப், ஜூனியர் டிப்டி இன்ஸ்பெக்டர், செஞ்சி.

போட்டிகள் :—தூற்றல், வாக்கு வன்மை, சம்பாஷணை முதலியன. சொற்பொழிவு:—'பெற்றோர் கடமை'—ஜனாப் சையத் யாகூப் சாகிப், ஹெட் மாஸ்டர் பரிசளிப்பு:—ஸ்ரீ G. ரத்தின சபாபதி முதலியார்.

---

## போர்டு ஸ்கூல், கூமாபட்டி, பெற்றோர் சங்கம்

17—11—41-ல் இச்சங்கக் கூட்டம் நடந்தது. ஜூனியர் டிப்டி இன்ஸ்பெக்டர் ஸ்ரீ K. S. பால நேத்திரம் B.A.,L.T., தலைமை வகித்து 'பெற்றோர் சங்கமும் அதன் வேலையும்' என்பது பற்றி யாவருக்கும் விளங்கத் தக்க முறையில் தெளிவாக எடுத்துக் கூறினார். பின்பு தமிழறிஞர் ஸ்ரீ ரெங்கசாமி தேவரும், தலைமை ஆசிரியர் ஸ்ரீ R. லக்ஷ்மீ நாராயணனும் தலைவர் உரையைப் பின் பற்றி சிறுவர் கல்வியில் பெரும் பகுதியை பெற்றோர்களே கைக்கொள்ளல் வேண்டும் என்று கூறினர்.

---

## ஆரம்ப ஆசிரியர் சங்கம், தம்பிபட்டி (at வத்திராயிருப்பு).

15—11—41-ல் இச்சங்கத்தின் மாதாந்திரக் கூட்டம் ஜூனியர் டிப்டி இன்ஸ்பெக்டர் ஸ்ரீ K. S. பால நேத்திரம் அவர்கள் தலைமையில் கூடிற்று. தலைவர் உரையில் ஆரம்ப பாடசாலைகளின் தற்கால நிலைமை, அவை எவ்விதங்களில் சீர்திருத்தமடைய வேண்டும், சர்க்காரால் ஏற்படுத்தப் பட்டிருக்கும் போதனை முறைத் திட்டங்களை எவ்வாறு அனுபவ முறையில் கொண்டுவர வேண்டும், போதனைமுறை சம்பந்தமான உபகரணங்களைத் தயார் செய்யும் முறை, மாணவர்களின் சங்கியை, ஆஜர், தேக்கம், தேர்ச்சி முதலியனவைகளை எவ்வாறு அபிவிருத்தி செய்யலாம் என்பன பற்றி ஆசிரியர்களுக்குச் சந்தேகம் தெளிய விரிவாகக் கூறினார். ஸ்ரீ R. லக்ஷ்மீ நாராயணன் வந்தனோபசாரம் கூறினார்.

---

## மதுராந்தகம் தாலுகா போர்டு ஆரம்ப ஆசிரிய சங்கம், மதுராந்தகம்.

30—11—41-ல் இச்சங்கம் காரியக் கமிட்டி கூடியது. கீழ்கண்ட தீர்மானங்கள் நிறை வேற்றப் பட்டன.

1. இச்சங்க ஸ்தாபனத்திற்கு வழிகாட்டிய ஸ்ரீ பெரும்பூதூர் தாலுகா ஆசிரிய சங்கத்திற்கு நன்றி செலுத்துகிறது.

2. இச்சங்கத்தை ஸ்தாபிப்பதில், ஒத்தாசை புரிந்ததற்காகவும், கல்வி டைரக்டர் அவர்களுக்கு தூதுகோஷ்டி போக உத்தரவளித்ததற்காகவும், ஆசிரியர்களின் சம்பள வெட்டை நீக்கியதற்காகவும் ஜில்லா போர்டு பிரசிடெண்டுக்கு மனமார்ந்த வந்தனத்தைச் செலுத்துகிறது.

3. இனி ஆசிரியர்களுக்கு ஒழுங்காக சம்பள உயர்வைக் கொடுக்கும் படி வேண்டிக் கொள்ளுகிறது.

4. கிராம அதிகாரிகளுக்கும், தாசில்தார்களுக்கும் பெண் குழந்தைகளை பள்ளியில் சேர்க்க ஆசிரியர்களுக்கு உதவியாயிருக்கும் படி உத்திரவளிக்கும்படி கல்வி டைரக்டர் அவர்களை வேண்டிக்கொள்கிறது.

5. ஆண் பள்ளிக்கூடங்களில் பெண் சங்கியை திட்டப்படி ஏற்படுத்த 31—3—42 வரை காலதவணை கொடுக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறது.

6. கவிதாகூர் அவர்கள் காலஞ்சென்றதற்காக எல்லாரும் ஒரு நிமிஷநேரம் மௌனமாக நின்றார்கள்.

---

## தர்மபுரி தாலுகா ஆரம்ப ஆசியர்கள் யூனியன் மகாநாடு, தர்மபுரி.

1941-ம் வருஷம் நவம்பர் மாதம் 1-2 தேதிகளில் இந்த யூனியன் இரண்டாவது மகாநாடு தர்மபுரி அட்வகேட் ஸ்ரீ **P. R.** சுந்தரமய்யர், **B. A., B. L.,** அவர்கள் தலைமையில் கூடிற்று.

இம்மகாநாட்டின் ஆதரவில் 1-முதல் 8-வகுப்பு வரை போதிக்க எல்லாப் பாடங்களுக்கும் வேண்டி தாலுகா ஆசிரியர் ஆசிரியைகளால் தயாரிக்கப்பட்ட உபகரணங்களின் பொருட் காட்சியை **Miss Stanoyn, B. A.,** திறந்து வைத்தார். புதிய பாட திட்டப்படி கைத்தொழில் சம்பந்தப்பட்ட முறையில் பிள்ளைகளால் செய்யப்பட்ட பலவித கைவேலைச் சாமான்களும் காட்சிச்சாலையை சிறப்புப்படுத்தன.

டிவிஷனல் இன்ஸ்பெக்டர் ஸ்ரீ **R. M. Savur** அவர்களும் ஜில்லா கல்வி அதிகாரி ஸ்ரீ **V.** நடராஜன் அவர்களும் இரண்டு தினங்களும் பொருட் காட்சிக்கும் மகா நாட்டுக்கும் விஜயம்செய்து சிறப்புரச்செய்தனர். காட்சிசாலையை சுமார் 2000 பேர் பார்வையிட்டு கௌரவித்தனர்.

தாலூகாவில் 11-பாடசாலைகளில் செஞ்சிலுவைச் சங்கங்கள் அமைக்கப்பட்டு சர்டிபிகேட் பொத்தான்கள் **Miss. A. G. Fernandez** அவர்களால் வழங்கப்பட்டன.

'**The New Scheme in Training Schools**' என்றும் விஷயத்தைப்பற்றி ஸ்ரீ லட்சுமி நரசிம்மய்யர் சொற்பொழிவு செய்தார்.

விளையாட்டுப் போட்டிகள் நடந்து பரிசளிக்கப்பட்டது. ஸ்ரீ **R. M. Savur** போட்டிப்பரிசுக்காக ரூ. 5 நன்கொடையளித்தார்.

ரேஞ்சு டிப்டி இன்ஸ்பெக்டர் ஸ்ரீ N. சதாசிவன் அவர்களின் தீவிர முயற்சியாலும் தாலூக்கா ஆசிரியர்களின் ஒத்துழைப்பினாலும் இம்மகாநாடு செவ்வனே நடந்தேறியது.

---

## திருவள்ளூர் தாலூகா நாகலாபுரம் ஆசிரியர் சங்கம், உல்லாசப் பிரயாணம்

20—11—41-ல் சுமார் 50 ஆசிரியர்கள் சேர்ந்து சீனியர் இன்ஸ்பெக்டர் ஸ்ரீ K. சீதாராமன் அவர்கள் தலைமையில் 13-மைலிலுள்ள கைலாசநாதர் நீர் வீழ்ச்சியையும், மலைமீதுள்ள அருவியின் உற்பத்திஸ்தானத்தையும், சுற்றியுள்ள ரமணீயக் காட்சிகளையும் பார்த்து வந்தனர். தலைவர் இம்மாதிரி பிரயாணங்களினால் ஏற்படும் நன்மைகளை விளக்கிச் சொன்னார்.

---

## கரூர் முனிசிபல் ஆரம்ப பாடசாலை, பெற்றோர் சங்கம்

8—12—41. ல் கரூர் டிஸ்ரிக்ட் முன்சீப் ஸ்ரீ S. ஆதிநாராண செட்டியார் அவர்கள் தலைமையில் இச்சங்கத்தின் இரண்டாவது ஆண்டு விழா நடந்தது. சுமார் 400 பிரமுகர்கள் விஜயம் செய்தனர். மாணவ மாணவிகள் கும்மி, கோலாட்டம், சம்பாஷணை முதலியவைகளால் எல்லோரையும் உற்சாகப்படுத்தினர் டவுன் பாடசாலை ஹெட்மாஸ்டர் ஸ்ரீ V. S. நடராஜய்யரால் வருஷாந்தர அறிக்கை படிக்கப்பட்டது; மாணவிகளுக்கு பரிசு வழங்கப்பட்டது. ஸ்ரீ S. சுந்தரமய்யர் ஆசிரியர்களுக்கும் பெற்றோர்களுக்கும் உள்ள சம்பந்தம் என்பது பற்றி சொற்பொழிவு செய்தார் தலைவர் முடிவுரைக்குப்பின் வந்தனோபசாரத்துடன் கூட்டம் இனிது முடிந்தது.

---

# மதிப்புரை

## "நமது இந்தியா சரித்திரங்கள்" (முதல் புத்தகம்)

ஆசிரியர் :—V. பூவராஹமூர்த்தி, M.A. விலை 0—9—0

பிரசுரகர்த்தர் :—ஆக்ஸ்பர்ட் யூனிவர்ஸிடி ப்ரெஸ், மதராஸ்.

இப்புத்தகத்தை எழுதியவர் சரித்திர ஆசிரியராய் பல வருடங்கள் அனுபவம் பெற்றவர். வகுப்பிற் கேற்றவாறும், சிறு மாணவர்கள் பிறருதவியின்றி கருத்துக்களை படித்துணருமாறு எளிய நடையில் தெளிவாகவும் எழுதப்பட்டிருக்கிறது. அழகிய சித்திரங்கள் ஆங்காங்கு சேர்க்கப்பட்டிருப்பதாலும், அப்பியாசங்கள் ஒவ்வொரு அத்தியாயத்தின் இறுதியில் கொடுக்கப்பட்டிருப்பதாலும், இரண்டு அழகிய படங்கள் நிறைந்த கால அட்டவணைகள் வரையப் பட்டிருப்பதாலும், மாணவர்கள் கற்கும் விஷயங்கள் அவர்கள் மனதில் செவ்வனே பதியும் என்பது திண்ணம். இப்புத்தகம் நம் தமிழ் நாட்டில் பெரிதும் போற்றப்படும் என நம்புகிறோம்.

## புதுமுறை பூகோள சாஸ்திரம்

[புத்தகம் 1, 2, 3—மூன்று, நான்கு, ஐந்து வகுப்புகளுக்குரியது.]

இயற்றியவர் :—K. M. சுப்பிரமணியம், M.A., L.T., (Dip. in Geo.)

பிரசுரகர்த்தர்கள் :—டி. வி. செல்லப்ப சாஸ்திரி & சன்ஸ், சென்னை.

இப்புத்தகங்கள், 1941-ல் வெளியிடப்பட்ட புதிய பாட திட்டத்தை யொட்டி எழுதப்பட்டுள்ளன. எளிய நடையில் எழுதப்பட்டிருக்கிறது. இதில் அநேக படங்கள் சேர்க்கப்பட் டிருக்கின்றன. உலகில் பல இடங்களில் வசிக்கும் மக்களின் வாழ்க்கையைக் காட்டக்கூடிய சித்திரப் படங்கள் பல இருக்கின்றன. ஒவ்வொரு பாடத்தினிறுதியிலும் பல பயிற்சி வினாக்கள் சேர்க்கப்பட் டிருக்கின்றன.

# பாலர் கல்வி

## கட்டுரை எழுதுவோர்களுக்கு

1. கட்டுரைகளை முழுக்காகிதத்தில் ஒரு பக்கத்தில் மாத்திரம் பக்கத்திற்கு 25 வரிகளுக்கு மேற்படாமலும் எழுத்துக்கள் தெளிவாயும் எழுதவேண்டும்.

2. ஆரம்பப் பள்ளிக்கூடங்களின் பாடங்களைச் சிறந்த முறையில் போதிக்க உதவும்படியான விஷயங்களடங்கிய கட்டுரைகளை வரவேற்கிறோம்.

## வாசகர்களுக்கு

வாசகர்கள் எந்தெந்த விதமான கட்டுரைகளை விரும்புகிறார்களென்பதற்கு அவ்வப்போது யோஜனைகளைப் பத்திராதிபருக்குத் தெரிவித்தால் பாலர் கல்வியை இன்னும் சிறந்த முறையில் நடத்த உதவியாயிருக்கும்.

# பத்திராதிபர் குறிப்புக்கள்

---

## ஆரம்பக் கல்வி

சென்றமாதத்தில் தென்னார்காடு ஜில்லாவில் சுமார் 250 போர்டு பாடசாலைகளினின்றும் கல்வி இலாகாவின் சில விதிகள்படி இல்லாமல் இருப்பதின் காரணமாக துரைத்தன அங்கீகாரம் எடுத்துவிடப்படும் என்ற உத்திரவு பிரப்பிக்கப்பட்டது நேயர்களுக்கு ஞாபகமிருக்கும். இம்மாதத்தில் நெல்லூர் ஜில்லாவில் சுமார் 130 பள்ளிக்கூடங்களுக்கு அந்த ஆபத்து உண்டாயிருக்கிறதாம். ஜில்லாபோர்டு தலைவர்கள் இது சம்பந்தமாக T. ஆஸ்டின் அவர்களைப் பேட்டிகண்டு, இவ்விதிகளின்படி வேண்டிய ஏற்பாடுகள் செய்வதற்கு தவணை கொடுக்கவேண்டுமென்றும், அதுவரையில் துரைத்தன அங்கீகாரத்தை நீக்காமலிருக்கவேண்டு மென்றும் அத்தூது கோஷ்டியினர் தெரிவித்துக்கொண்டனர் என்று தெரிகிறது. அதிகாரிகளின் ஆரம்பக் கல்வி கொள்கையை எல்லோரும் ஒப்புக்கொள்கிறார்கள். ஆனால் அக்கொள்கையை நிறைவேற்றும் வழிதான் சரியாகவில்லை என்று பலர் அபிப்பிராயப்படுகிறார்கள். இக்கொள்கையை பூர்த்திசெய்வதற்கென்று ஏற்படுத்திய விதிகளில் சிலவே, பல பள்ளிக்கூடங்கள் மூடப்படுவதற்குக் காரணமாகின்றது. ராஜகிரியில் முஸ்லிம் பாடசாலையில் சமீபத்தில் நடந்த பரிசு அளிப்பு விழாவில் தஞ்சை ஜில்லா போர்டு தலைவராகிய ஸ்ரீமான் நாடிமுத்துப்பிள்ளை ஆரம்பக்கல்வி நிலையைப்பற்றி பேசும்பொழுது துரைத்தனத்தார் கையாளும் முறையினால் பல பள்ளிக்கூடங்கள் மூடப்பட்டு வருவதைப் பற்றி விவரித்து, இம்முறையினால் கல்வி முன்னேற்றத்தை அதிகாரிகள் விரும்புகிறார்களா அல்லது கல்விக்கென்று ஒதுக்கப்படும் மானியத்தை குறைக்க வேண்டுமென்று எண்ணப்படுகிறார்களா என்று சந்தேகித்திருக்கிறார். மாதாமாதம் பல நூறுக்கணக்கான பள்ளிக்கூடங்களை மூடும்படி உத்திரவிட்டு வருவதால் நாட்டில் கலவரம் ஏற்படும். ஸ்தல ஸ்தாபனங்களின் தலைவர்களோடு ஆலோசித்து ஆரம்பக் கல்வி அபிவிர்த்தி செய்ய சரியான முறையை அவர்கள் ஒத்துழைப்புடன் அமுலுக்குக் கொண்டு வருவதே நலம். 'நான் பிடித்த முயலுக்கு மூன்றேகால்' என்று, கல்வி இலாகா தலைவர் சொல்வதே சரி என்று இருந்தால் ஆரம்பக் கல்வி முன்னேற்றமடையாது. T. Austin அவர்கள், பல ஜில்லா போர்டு தூது கோஷ்டிகளை இது வரையில் கண்டுபேசியிருப்பர். இனியாவது, கல்வி இலாகா பிரகடனம் செய்த விதிகளின் நன்மை தீமையைக் கவனித்து, ஒழுங்கான திட்டத்தை ஏற்படுத்துவார் என்று நம்புகிறோம்.

---

## சென்னை கார்ப்பரேஷனும் முதியோர் கல்வியும்

சென்னை கார்ப்பரேஷன் கல்வியறிவில்லாத முதியோர்க்குப் படிப்பு சொல்லிக் கொடுப்பதற்காக ஒருதிட்டம் தயாரித்து, அதற்

காக ரூ. 10,000 ஒதுக்கி வைக்கப்பட்டது மிகவும் பாராட்டத் தக்கதே. இத் திட்டத்தைப்பற்றி ஆலோசிக்கையில் கார்ப்பரேஷன் புதிய மேயர் ஸ்ரீமான் வி. சக்கரை செட்டியார் சென்ற வருஷம் பெரியவர்களுக்குக் கல்வி போதிக்கும் இயக்கம் வெற்றி பெறவில்லை என்றும் இவ்வருஷம் அதை வெற்றிகரமாக நடத்தி முடிக்க 10,000 ரூபாயைக் கார்ப்பரேஷன் ஒதுக்கியிருக்கிறது என்றும் அறிவித்தார். இத்திட்டத்தின்படி, எழுத்தறிவே இல்லாத முதியோர்களுக்கு படிப்புச் சொல்லிக்கொடுப்பதற்காக இரண்டு டிவிஷன்களுக்கு ஒரு வகுப்பு வீதம் ஏற்படுத்தி தினம் 2 மணிநேரம் பாடம் சொல்லிக் கொடுக்க ஏற்பாடு செய்யப்படும். இது தவிர, சிறிது படிக்கத் தெரிந்தவர்களுக்கு அப்படிப்பை மறக்கா வண்ணமும், மேற்கொண்டு விர்த்தி செய்வதற்கும் உரிய பிரசங்கங்கள் ஏற்பாடு செய்யப்படுமாம். இம்மாதிரி செய்வதில் நல்ல பலன் கிடைக்குமென்றே நம்புகிறோம். ஆயினும் எழுதப்படிக்கத் தெரியாத முதியோர்களுக்குக் கல்வி கற்பிக்கும் முறையில் தேர்ச்சி பெற்ற ஆசிரியர்களை இவ்வேலைக்கு அமர்த்துவதே சரியான முறையாகும். யார் வேணுமென்றாலும் கல்விகற்பிக்கலாம் என்ற எண்ணம் தவறானதாகும். அதிலும் முதியோர்க்கு, ஊக்கமுள்ள முறையிலும் எளிதில் கற்றுக்கொள்ளும் முறையிலும் போதித்தால்தான் அவர்கள் உற்சாகத்துடன் படித்து வருவார்கள். எனவே, முதியோர் கல்வி வகுப்புக்கு நியமிக்கப்படும் ஆசிரியர்களுக்கு முதியோர்க் கல்வி போதனாமுறையில் பயிற்சி கொடுத்து பின்னரே முதியோர் கல்வி வகுப்புகளை நடத்துவது நல்ல பலன் அளிக்கும் என்பதில் சந்தேகமில்லை. இவ்விஷயத்திற்காக செலவிட போதுமான பணம் கிடைக்காததினால் தேர்ச்சிபெற்ற ஆசிரியர்களைக்கொண்டு, இந்த ரூபாய்க்கு அதிகபலனை அடைய அதிகாரிகள் பிரயத்தனப்படவேண்டும். 15 நாள் அல்லது 1 மாதகாலம், ஆசிரியர்களுக்கு முதியோர்கல்வி போதனாமுறையில் பயிற்சி அளித்து பிறகு அவர்களின் உதவியைப் பெறலாம்.

சென்னைக் கார்ப்பரேஷன் மேயராகிய ஸ்ரீமான் சக்கரை செட்டியார் பொதுமக்களுக்கு நெடுநாளாகச் சேவைசெய்துவந்த அனுபவம் வாய்ந்த தேசத்தொண்டர். கார்ப்பரேஷன் கல்வி அதிகாரியாகிய ஸ்ரீமான் சங்கரனும், தொழிலாளர்களுக்கும் ஏழை மக்களுக்கும் தொண்டு புரிவதில் மிக்க ஊக்கம்கொண்டவர். எனவே, இவர்கள் இருவரும் இம் முதியோர் கல்வி திட்டத்தை வெற்றிகரமாக நடத்துவார்கள் என்பதில் ஐயமில்லை என்று உறுதியாகச் சொல்லலாம். சென்னைக் கார்ப்பரேஷன் மற்ற முனிசிபாலிடிகளுக்கு ஒரு வழிகாட்டிபோலாகும். இவர்களின் முதியோர் கல்வி இயக்கம் சரிவர நடந்தால் மற்ற முனிசிபாலிடிகளும் அதைக் கடைப்பிடிக்கும். நாடும் முன்னேற்றமடையக் கூடும்.

திருச்சி ஜில்லா ஆசிரியர் சங்கப் பதிப்பு

★ ஆரம்ப ஆசிரியர் பாடதிட்ட மொழி பெயர்ப்பும் விமர்சனமும்

★ ஆரம்பக் கல்வி விதி விளக்கம்

★ உபாத்தியாயர்கள் கைப்புத்தகம்

(200 பக்கங்கள் அடங்கியது)

விலை ரூ. 0—8—0. (தபால் சிலவு பிரத்தியேகம்)

: வேண்டுபவர்கள் :

ஸ்ரீ S. T. ராமானுஜ அய்யங்கார்

ஸ்வாமிநாத பவன் :: ஸ்ரீரங்கம்

: என்ற விலாஸத்துக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளவும் :

மாணவர்களே! வாலிபர்களே!!

உங்களுக்கென சமைத்து வைத்துள்ள

சுவாமி விவேகாநந்தர்

ஞான அமிழ்தத்தை உண்ணுங்கள்.

★

| | | | |
|---|---|---|---|
| ஸ்ரீ விவேகாநந்த | சரித்திரம் | விலை | 0—12—0 |
| ,, ,, | கடிதங்கள் | ,, | 0—10—0 |
| ,, ,, | நமது தாய் நாடு | ,, | 0— 8—0 |
| ,, ,, | சுவாமிகள் | ,, | 0— 3—0 |
| ,, ,, | எனது குருநாதர் | ,, | 0— 3—0 |

★

விரிவான ஜாபிதாவுக்கு எழுதுக

ஸ்ரீ ராமகிருஷ்ண மடம், மயிலாப்பூர், சென்னை.